Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

Head Office:
Toronto
1345 Morningside Avenue
Unit 6
Toronto, Ontario M1B 5K3

Tel: 416 240 0078
Fax: 416 240 1601
www.canadiantamilcongress.ca
info@canadiantamilcongress.ca

**உடனடி வெளியீடு**

**எதிர்கால திட்டத்தை வரையறுக்க CTC வியூக அமர்வு ஒன்றை நிகழ்த்தியிருந்தது.**

டொராண்டோ, ஜூன் 17, 2024 அன்று– கனேடிய தமிழர் பேரவை (CTC) அதன் உறுப்பினர்கள், இயக்குநர்கள் குழு மற்றும் ஆலோசகர்களை ஒன்றிணைத்து ஒரு முழு நாள் அமர்வை சனிக்கிழமை அன்று நடத்தியிருந்தது. கனடிய தமிழர் பேரவையின் அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்பான திட்டமிடலை மேற்கொள்வதற்கான வியூகங்களை உருவாக்கும் ஒரு அமர்வாக இது அமைந்திருந்தது.

இந்த அமர்வு அர்ப்பணிப்புள்ள சமூக உறுப்பினர்களால் மிகவும் விரிவான முறையில் தொகுக்கப்பட்டிருந்ததோடு பலம், பலவீனங்கள், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவை குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இந்த கலந்துரையாடல்கள் கனடா மற்றும் இலங்கையில் CTC இன் பங்கை அடையாளம் கண்டு முன்னுரிமை அளிப்பதோடு பரந்த கனேடிய தமிழ் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான பயனுள்ள வழிகளையும் ஆராய்வதில் கவனம் செலுத்தியிருந்தது.

இந்த அமர்வின் முக்கிய விவாத புள்ளிகள்:

- கனடா மற்றும் இலங்கை ஆகிய இரண்டிலும் CTC இன் பரிணாமப் பங்கு
- கனடிய தமிழ் சமூகத்துடன் பரந்த ஈடுபாட்டிற்கான உத்திகள்
- அமைப்பு மற்றும் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்

இந்த அமர்வைத் தொடர்ந்து, கனேடிய தமிழ் சமூகத்தின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளை நன்கு புரிந்து கொள்வதற்காக CTC ஒரு விரிவான பொது அறிவுரை கோரலை நடத்தவுள்ளது. இந்த ஆலோசனை செயல்முறையானது தமிழ் சமூகத்தின் பலதரப்பட்ட எண்ணங்களையும் தேவைகளையும் CTC இன் செயற்திட்டங்களில் திறம்பட பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.

கனேடிய தமிழ் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒருங்கிணைந்ததும் உள்ளடக்கியதுமான சூழலை வளர்ப்பதற்கு CTC உறுதிபூண்டுள்ளது. இந்த அமர்வின் போது கிடைக்கப்பெற்ற பரிந்துரைகள் CTC க்கு அதன் தாக்கத்தை வலுப்படுத்தவும், அதன் செயல்பாடுகள் சமூகத்தின் தேவைகளுடனும் அபிலாஷைகளுடனும் ஒத்துப்போவதை உறுதி செய்யவும் உதவும்.

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
416-240-0078 /
info@canadiantamilcongress.ca

கனேடிய தமிழர் பேரவை பற்றி:
கனடிய தமிழர் பேரவை (CTC) என்பது கனடாவில் உள்ள தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுக்கும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். CTC கனடாவில் தமிழர்களின் கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், பரந்த கனேடிய சமூகத்துடன் வலுவான உறவுகளை வளர்ப்பதற்கும், உலகளவில் தமிழர்களைப் பாதிக்கும் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.